DINAMALAR
National Tamil Daily

ஏப்ரல் 27,2018 IST

# சிங்கப்பூரில் “ வெற்றிக் கொடி கட்டு” - இலக்கிய நிகழ்வு

ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர் சங்க சிங்கப்பூர் கிளை , “ வெற்றிக் கொடி கட்டு” என இலக்கிய விழாவாக தனது தமிழ் மொழி விழா நிகழ்வை உமறுப் புலவர் தமிழ் மொழி நிலைய அரங்கில் நடத்தியது .அமைப்பின் தலைவர் பட்டயக் கணக்காய்வாளர் முனைவர் மு.அ.காதர் தலைமை வகித்தார்.ஆங்கிலோ சீனத் தன்னாட்சிப் பள்ளி மாணவர்கள் ராஜேஷ் முரளி, காமராஜ் திருக்குமரன் , விக்னேஷ் மணி ஆகியோரின் மாணவர் அரங்க முடிவில் அமைப்பின் நிர்வாகிகள் தமிழில் பேசுவோம் - தமிழை நேசிப்போம் என இரு மருங்கிலும் பதாகை ஏந்தி வந்தது கண்கொள்ளாக் காட்சியாக விளங்கியது. பள்ளித் தேர்வில் சிறந்து விளங்கிய மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கி கவுரவிக்கப்பட்டது. நாடாளு மன்ற உறுப்பினர் கே. தனலட்சுமி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.முத்தாய்ப்பு நிகழ்வாக , சிங்கப்பூரில் பல்லாண்டு தமிழ் இலக்கிய- பொதுச் சேவையாற்றும் தமிழ் மொழி பண்பாட்டுக் கழகத் தலைவர் மு.ஹரிகிருஷ்ணனுக்கு இவ்வாண்டுக்கான ஜமாலியன் விருது , பலத்த கரவொலிக்கிடையே வழங்கப்பட்டது . சிறப்பு விருந்தினர் விருது வழங்கி, பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார். சென்னை நீதிபதி பஷீர் அகமது மகளிர் கல்லூரிப் பேராசிரியர் முனைவர் பர்வீன் சுல்தானா, “ வெற்றிக் கொடி கட்டு “ என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார் . அரங்கம் நிறைந்த இந்நிகழ்வை கலந்தர் மைதீன் நெறிப்படுத்தினார் .




அடுத்து

சிங்கப்பூரில் “ வெற்றிக் கொடி கட்டு” - இலக்கிய நிகழ்வு




முந்தைய
அடுத்து

சிங்கப்பூரில் “ வெற்றிக் கொடி கட்டு” - இலக்கிய நிகழ்வு



முந்தைய

அடுத்து

சிங்கப்பூரில் “ வெற்றிக் கொடி கட்டு” - இலக்கிய நிகழ்வு



முந்தைய

அடுத்து

சிங்கப்பூரில் “ வெற்றிக் கொடி கட்டு” - இலக்கிய நிகழ்வு



முந்தைய

சிங்கப்பூரில் “ வெற்றிக் கொடி கட்டு” - இலக்கிய நிகழ்வு